முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 953

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.05.2022**, திங்கட்கிழமை

1. ஓங்கார ஞானியே அரங்கா
ஓங்காரக் குடில் படைத்த தேசிகா
ஓங்கார பலங்கொண்ட உன் சக்தி கொண்டே
இந்த உலகத்தை ஞானவழி நடத்துவேன் ஆறுமுகன் யான் என்று கூறி
2. கூறியே அரங்கனுக்கு சுப்ரமணியர் யானும்
குறையில்லா ஞான அறிவுரை ஆசி
தெரிவிப்பேன் சுபகிருது தகர் திங்களில்
(சுபகிருது வருடம் சித்திரை மாதம் 26 ம் நாள், 09.05.2022 திங்கட்கிழமை)
தேசிககனுக்கு இன்னும் பல சக்தி கூட்டி
3. கூட்டியே இந்த உலகமெங்கிலுமே
குரு அரங்கன் தயவால் ஞானவாழ்வு
திரு அருளாக மக்களுக்கு வந்தடைந்து
தேசிகன் தீட்சை தர்ம பலம் கொண்டு
4. பலங்கொண்டு மக்களை மாற்றி
பாடிடுவேன் உலகோர்க்கு கர்மவினை சேராவண்ணம்
வளம்பெறச் செய்து இந்த கலியில்
வள்ளல் தன்மை பட உலகோரெல்லாம் ஞானவான்களாக
5. ஆகவே அரங்கன் வழி அற்புதம் புரிவேன்
அரங்கன் வாழ் ஓங்காரக்குடில் நோக்கி அகிலத்தாரெல்லாம் தொடர்ந்து வருதல் காண
வரங்கள் பலபல வாழ்வினில் கிட்டி
வல்லமைபட அவரவர் விரும்புகின்ற வண்ணம்
6. வண்ணமுடன் ஞான வழியில்
அழியாமையும் பிசகில்லா வாழ்வும்
பெருவாழ்வும் பேர் அருளும்
கிட்டி சிறப்பு காணும்
7. காணவே கந்தவேலன் என்சக்தி
கருணைபட துறையூர் மண்ணாம் ஓங்காரக்குடிலில் நிறைந்திருக்க
சிந்தைவைத்து உலகோர் வரவர
சித்திகள் பெருகி அரங்கன் வழி பேரற்புதம் நடக்கும்

8. நடக்கவே அரங்கன் யானே முருகன்
நிலவுலகில் அற்புதத்தை நடத்த வந்த அவதாரமிது
சலனமற உலகோர் அரங்கன் திருவடி பற்றி வர
சாற்றிடுவேன் ஆறுமுகன் என் காட்சிக்கண்டு சிறக்க நேரும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–